



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15/10/2023) செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரை சாலை, உத்தண்டி அருகே கானாத்தூர் ரெட்டிக்குப்பத்தில் (மாயாஜால்முன்புறம்) நடைபெற்ற,ஹெச். சி. எல் நிறுவனம் , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனம் இணைந்து நடத்திய மாபெரும் சைக்ளோத்தான் போட்டியினை(HCL, SDAT & CFI) குறு,சிறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் ஜே மேகநாத ரெட்டி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர. ராகுல்நாத் தாம்பரம் காவல் துணை ஆணையர் பவன்குமார் ரெட்டி, தாம்பரம் இணை ஆணையர் மூர்த்தி, ஹெச்.சி. எல் நிறுவனத் தலைவர் (வியூகம்), சுந்தர் மகாலிங்கம், அரசு அலுவலர்கள்மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்...!

முதல் பக்கத் தொடர்ச்சி

விண்ணில் ஏவச் செய்தார்.

அவரது இத்தகைய வியக்கதக்க செயலைப் பாராட்டி ஒன்றிய அரசு இவருக்கு 1981ஆம் ஆண்டு இந்தியாவின் பெருமை மிகு விருதான "பத்ம பூஷன்" விருது வழங்கி கௌரவித்தது. 1963 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் பல பணிகளை சிறப்பாக செய்த இவர், 1998 ஆம் ஆண்டு பொக்ரான் அணு ஆயுத சோதனையில் முக்கிய பங்காற்றியுள்ளார். "இந்தியாவின் ஏவுகணை நாயகன்" என்றும் "அணுசக்தி நாயகன்" என்றும் அவர் போற்றப்பட்டார்.

இந்தியாவின் 11 வது குடியரசு தலைவராக ஜூலை 25 ஆம் நாள் 2002ல் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் பதவியேற்றார். 2007 ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர் "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

மாணவர்களிடம் மிகுந்த அன்பு கொண்ட டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், "கனவு காணுங்கள், அந்தக் கனவு உறக்கத்தில் வரும் கனவாக இருக்கக் கூடாது. உறக்கத்தை விரட்டும் கனவாக இருக்க வேண்டும்" என்று மாணவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டினார். டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் அக்னி சிறகுகள், இந்தியா 2020 போன்ற பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். மேலும், 1990–ஆம் ஆண்டு 'பத்ம விபூஷண்' விருது, 1997–ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர் ஆவார்.

இத்தகைய பல்வேறு சிறப்புகளைக் கொண்ட டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களுக்கு சிறப்பு சேர்க்கும் வகையில், சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் புதிதாக நிறுவப்ப ட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையை முதல மைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று காலை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ட்விட்டர் பதிவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**பெருமைமிகு அரசுப் பள்ளியில் பயின்று தனது அறிவுத் திறத்தால் நாட்டின் முதல் குடிமகனான அறிவியலாளர் அப்துல்கலாம் அவர்களின் பிறந்தநாளில், அவர் பயின்று - பயிற்றுவித்த அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் அவரது திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தேன்.**

**படித்து முன்னேறும் இந்த இளைஞர் பட்டாளத்தின் தன்னம்பிக்கை, அப்துல் கலாம் அவர்களின் நம்பிக்கையை நிச்சயம் காப்பாற்றும்! அறிவியல் பார்வையோடு உலக அரங்கில் INDIA சிறந்து விளங்கும்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## திருவண்ணாமலை மாவட்டத்தில் – சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 16 -

திருவண்ணாமலை மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர் களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, நிதியுதவி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பான, முதல்வர் அவர்களின் நேற்றைய அறிவிப்பு வருமாறு:-

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பக்கிரிபாளையம் காந்திநகர் பகுதி, திருவண்ணாமலை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் இன்று (15.10.2023) காலை காரும், லாரியும் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதி ஏற்பட்ட விபத்தில் சம்பவ இடத்திலேயே இரண்டு குழந்தைகள் உட்பட ஏழுபேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் படுகாயமடைந்து திருவண்ணாமலை அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பெண்ணுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத் தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## காஞ்சிபுரம் – செங்கல்பட்டு – திருவள்ளூர் – சென்னை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக மறைமலைநகரில் நடைபெறும்

# ஆய்வுக் கூட்டத்திற்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு 4 இடங்களில் வரவேற்பு!

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், அக்.16-

காஞ்சிபுரம் - செங்கல்பட்டு - திருவள்ளூர் - சென்னை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக மறைமலைநகரில் உள்ள மாநில ஊரக பயிற்சி நிலையத்தில் 2 நாட்கள் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று ஆய்வு செய்திட நாளை 17ஆம் தேதி காலை மறைமலைநகருக்கு வருகை தரும் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஆலந்தூர், குரோம்பேட்டை, தாம்பரம், கூடுவாஞ்சேரி ஆகிய 4 இடங்களில் கழகத்தினர் அனைவரும் அலைகடலென திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர்குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் உள்ள ஏழை - எளிய - தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வு வளம் பெறுவதற்காக, தினம் தினம் நல்ல பல திட்டங்களைத் தந்து, தமிழ்நாட்டு மக்களின் நலம் பேணும் நல்லாட்சியை நடத்தி, இந்தியாவே வியக்கும் வண்ணம் அனைத்து தலைவர்களும் போற்றிப் பாராட்டும் வகையில் திராவிட மாடல் நல்லாட்சி தந்து கொண்டிருக்கும் நம்முடைய ஒப்பாரும் மிக்காருமில்லா முதல்வர் அவர்கள் தலைமையிலான மக்கள் போற்றும் மகத்தான ஆட்சியில்,

காஞ்சிபுரம் செங்கல்பட்டு - திருவள்ளூர் - சென்னை மாவட்டம் ஆகிய 4 மாவட்டங்கள் அடங்கிய காஞ்சிபுரம் மண்டபத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் வருகிற 17, 18, ஆகிய இரு நாட்கள் மறைமலைநகரில் உள்ள மாநில ஊரகப் பயிற்சி நிலையத்தில் நடைபெறுகிறது.

நம் நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று 4 மாவட்டங்களில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்கிறார்.

வளர்ச்சிப் பணிகள் தொடர்பான இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்க நாளை 17ஆம் தேதி காலை 8.00 மணியளவில் மறைமலைநகருக்குப் புறப்பட்டு செல்லும் நம்முடைய உயிரனைய தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட எல்லையான ஆலந்தூர் கத்திப்பாரா அருகில் உள்ள ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையம் முன்பு என்னுடைய (தா. மோ.அன்பரசன்) தலைமையில் காலை 8.00 மணிக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.



குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது. தாம்பரம் பேருந்து நிலையம் அருகில் தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ். ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

அடுத்து நந்திவரம் - கூடுவாஞ்சேரி பேருந்து நிலையம் முன்பு மாவட்ட துணைச் செயலாளர் வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இந்த 4 இடங்களிலும் ஆங்காங்கு உள்ள ஒன்றிய நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் அந்தந்த ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் உள்ள கழக நிர்வாகிகள் - கழக அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் அனைவரும் அலைகடலெனத் திரண்டு நின்று தமது கரங்களில் இருவண்ணக் கொடி ஏந்தி நின்று பிரமாண்டமான முறையில் வரவேற்பு அளிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய ஒப்பற்ற தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு வழியெங்கும் 4 இடங்களில் கழகத்தினர் திரண்டு நின்று தரும் எழுச்சியான வரவேற்பில் நமது மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரும் பங்கேற்பது "நமது உரிமை" நமது கடமை என்ற அந்த உணர்வோடு பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என்று மேலும் கேட்டுக்கொள்கிறேன்.

திக்கெட்டும் உள்ள மக்கள் மனம் மகிழ்ந்து போற்றி பாராட்டுகின்ற வகையில் நடத்தி வரும் நம்முடைய உயிரினும் மேலான பாசமிகு அன்புத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழியெங்கும் கழகத்தினர் தமது கரங்களில் கழக கொடியேந்தி ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வரவேற்பு அளிக்க வேண்டும் என்று இருகரம் கூப்பி அழைக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

## 'வாட்ஸ் அப்' பில் வந்த செய்தி!




### நெம்மேலியில் பராமரிப்புப் பணிகள்!

## சென்னை மண்டலங்களில் குடிநீர் நிறுத்தம்!

சென்னை, அக்.16-

நெம்மேலியில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப் பட உள்ளதால் 17.10.2023 அன்று காலை 09.00 மணி முதல் 18.10.2023 அன்று காலை 09.00 மணி வரை மண்டலம்13, 14 மற்றும் 15க்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம் 13 (அடையாறு): தரமணி, கோட்டூர் கார்டன், ஆர்.கே.மடம் தெரு, திருவான்மியூர், வேளச்சேரி மற்றும் இந்திரா நகர் OHT. மண்டலம் 14 (பெருங்குடி): கொட்டிவாக்கம், பாலவாக்கம், பெருங்குடி, பள்ளிக்கரணை, மடிப்பாக்கம் மற்றும் புழுதி வாக்கம். மண்டலம் 15 (சோழிங்கநல்லூர்): ஈஞ்சம் பாக்கம், நீலாங்கரை, அக்கரை, வெட்டுவான்கேணி, சோழிங்கநல்லூர், செம்மஞ்சேரி மற்றும் ஒக்கியம்துரைப்பாக்கம்

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப் படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

## தி.மு.க. இலக்கிய அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சென்னை தெற்கு மாவட்டம்**

**புரவலர்** : எம்.எஸ்.மணி, 42, 4லது தெரு, ராகவன் காலனி, அசோக் நகர், சென்னை600083.

தலைவர் சுப. முத்துவேல் 41, சத்தியமூர்த்தி தெரு, தேவராஜ் நகர், சாலிகிராமம், சென்னை 600093.

**துணைத் தலைவர்** : டி.எஸ். ரவிச்சந்திரன் 25/12/3, இளையாழ்வார் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.

**அமைப்பாளர்** கொட்டிவாக்கம் ம. பார்த்திபன், 3/79, முத்தாலம்மன் கோயில் தெரு, கொட்டிவாக்கம், குப்பம் தெரு, சென்னை 600041.

**துணை அமைப்பாளர்கள்**: ஏ.எஸ். பழனி 19/8, பி.கே. மேஸ்திரி தெரு, நியூ காலனி, சைதாப்பேட்டை, சென்னை 600015. பு. ஜவகர்தீன் 18, புதுதெரு, மசூதி காலனி, கிண்டி, சென்னை 600032. வெங்கடேசன் 5, வடக்கு மாட வீதி, கோயம்பேடு, சென்னை 600107. என். மாதவன் 6, முத்துமாரியம்மன் கோவில் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை 600078. ஜி. மூர்த்தி 5/304, முகப்பேர் மேற்கு, சென்னை - 600037. மா.பா. சித்ராலயம் 4/6, பிள்ளையார் கோயில் தெரு, காரம்பாக்கம், சென்னை 600116. மு.பா. நடராஜ் 282, மல்லிகைபூ நகர், அடையார், சென்னை - 600020. ந. நீலகண்டன் 25/62, மதியழகன் தெரு, நேரு நகர், வேளச்சேரி, சென்னை 600042. கே. முத்து 36, வீரவாஞ்சிநாதன் தெரு, பெருங்குடி, சென்னை 600096. தே. புருஷோத்தமன் 8, தேவர் தெரு, அம்பேத்கர் புரட்சி நகர், பெருங்குடி, சென்னை 600096. ஜி. விஜய்கண்ணன் 4/382, ராம்கார்டன், பாலவாக்கம், சென்னை 600041. எம். குருசாமி 3/27, காந்தி சாலை, செம்மஞ்சேரி, சென்னை 600119. க. துரைராஜ் 1752, டி.என்.எச்.பி. காலனி, அயப்பாக்கம், சென்னை 600077. எஸ். முனுசாமி 1/224, 2வது குறுக்குத் தெரு, அபிநந்தன் நகர், நன்மங்கலம், சென்னை 600129. சென்னை அரங்கநாதன் 128, ராணி அண்ணா நகர், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை 600078.

**கரூர் மாவட்டம்**

**தலைவர்** : எம். அரியநாயகம் எண். 181/எ, தியாகி இல்லம், வாங்கல் அஞ்சல், மணிமங்கலம் (தா), கரூர் 639114

**துணைத் தலைவர்** : க.ப. பாலசுப்பிரமணியம் 22, தேர் வீதி, கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் 639001.

**அமைப்பாளர்** : புலவர் அ. அருணா பொன்னுசாமி, 24/7, அண்ணா நகர் இரண்டாம் தெரு, கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் 639001.

**துணை அமைப்பாளர்கள்** : நா. பத்துமலை காஞ்சேரிக்கா வலசு, கார்வழி அஞ்சல், புகளூர் தாலுக்கா, கரூர் மாவட்டம். பா. எழில்வாணன் கோவில் தெரு, அண்ணா நகர், அரவக்குறிச்சி தாலுக்கா, கரூர் மாவட்டம். ப. செல்வராஜ் 27/820, பள்ளபாளையம், பள்ளபாளையம் அஞ்சல், மண்மங்கலம் தாலுக்கா, கரூர் மாவட்டம் 639002. ம. வீரப்பன் 11/19, பூவாயிபட்டி, கள்ளை அஞ்சல், குளித்தலை தாலுக்கா, கரூர் மாவட்டம் 639110. முனைவர் பி. சுரேஷ்பிரபு 83/எ, மாரியம்மன் கோவில் தெரு, வேடிச்சிபாளையம் அஞ்சல், மண்மங்கலம் தாலுக்கா, கரூர் மாவட்டம் 639114.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் : 13.10.2023

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்,
தி.மு.க. இலக்கிய அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பரங்கிமலை எஸ். வேணுகோபால்

### அக்டோபர் 16 (1994)



இளமைக் காலத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கைகளிலே நாட்டம் கொண்டு, பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோர் தலைமையில், தொடர்ந்து கழகப் பணியாற்றி வந்தவர் இவர். 25 ஆண்டுகளுக்கும் மேலாக பரங்கிமலை கிளைக் கழகச் செயலாளராகவும் – பரங்கிமலை நகரியக் கழகத்தின் முதல் செயலாளராகவும் பணியாற்றியவர்.

தொடர்ந்து முப்பதாண்டு காலம் பரங்கிமலை கண்டோண்மென்ட் உறுப்பினராகவும் – இருமுறை கண்டோண்மென்ட் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

"பரங்கிமலைப் பகுதியிலே கழகத்தை வளர்த்த தொண்டர்களில் மறைந்த வேணுகோபால் அவர்களும் ஒருவர். கட்சியிலே உள்ள தனிப்பட்டவர்களைவிட – கழகத்தின் ஒட்டுமொத்த நலன்தான் முக்கியம் எனக் கருதி, கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். எனது அன்பைப் பெற்றவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**